Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-1**

Name : லட்சுமணன்
Father / Husband name : ஏழுமலை
Village : கீழ்மாவிலங்கை
Age : 34
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். சாட்சி முருகன், முனுசாமி ஆகியோர் எனது சித்தப்பா முறை. சாட்சி பாண்டியராஜன் எனது நண்பர். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.01.2022 அன்று இரவு 9 மணியிளவில் எங்கள் ஊரில் உள்ள ரேசன் கடை அருகே திருவிழாக்கூட்டம் நடந்தது. அப்போது கணக்கு வழக்கு பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரி கிருஷ்ணமூர்த்தி பொய்கணக்கு எழுதுகிறீர்கள் என்று பிரச்சனை செய்து கணக்கு நோட்டை தூக்கிப்போட்டர். அந்த கூட்டத்தில் இருந்த நான் ஏன் கணக்கு நோட்டை தூக்கிப்போடுகிறீர்கள் என்று எதிரி கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டபோது அவர் என்னை ஓத்தா தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டி, வலது கை மோதிர விரலை கடித்துவிட்டார். சண்டை சத்தம் கேட்டு வீட்டிலிருந்து வந்த அக்கா சங்கீதா எதிரி கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டபோது அவரையும் அசிங்கமாகபேசி, செங்கல்லால் மண்டையில் அடித்துவிட்டார். கூட்டத்திலிருந்த வத்துமலை எதிரியை கேட்டதற்கு எதிரி கிருஷ்ணமூர்த்தி அவர் வாயை கடித்து கிழிந்துவிட்டது. எதிரி கிருஷ்ணமூர்த்தியின் நண்பர் அருள்பாண்டியன் அங்கு வந்து எதிரி கிருஷ்ணமூர்த்தி அப்படி தான் செய்வார், அவரையும் கேட்கக்கூடாது என்று அங்கிருந்த அனைவரையும் அசிங்கமாக பேசினார். பின்னர் அடிப்பட்ட என்னையும், எனது அக்கா, வத்துமலை ஆகியோர்கள்

திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். வத்துமலை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார். எனக்கு கையில் சிகிச்சை அளித்து, எனது அக்காவிற்கு தலையில் 6 தையல்கள் போடப்பட்டது. வத்துமலைக்கு வாயில் 18 தையல்கள் போடப்பட்டது. பின்னர் மறுநாள் வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-2**

Name : முருகன்
Father / Husband name : கோவிந்தசாமி
Village : கீழ்மாவிலங்கை
Age : 47
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1, A2 present. APP present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 லட்சுமணன் அண்ணன் மகன் முறை. சாட்சி முனுசாமி என்பவரை எனக்கு தெரியும். சாட்சி பாண்டியராஜன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.01.2022 அன்று இரவு 9 மணியிளவில் எங்கள் ஊரில் உள்ள ரேசன் கடை அருகே திருவிழாக்கூட்டம் நடந்தது. அப்போது கணக்கு வழக்கு பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரி கிருஷ்ணமூர்த்தி தப்பாகணக்கு எழுதுகிறீர்கள் என்று பிரச்சனை செய்தார். அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் கேட்டபோது எதிரி கிருஷ்ணமூர்த்தி வத்துமலையை தள்ளிவிட்டு அவரின் உதட்டில் கடித்துவிட்டார். அ.சா.1 ன் வலது கை மோதிர விரலை எதிரி கிருஷ்ணமூர்த்தி கடித்துவிட்டார். சாட்சி சங்கீதா அவரின் தம்பி அ.சா.1 கடித்ததை கேட்டபோது அவரையும் செங்கல்லால் தலையில் அடித்துவிட்டார். எதிரி கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் தேவிடியா பையா என்று அசிங்கமாக திட்டினார். 2வது எதிரி வந்து பொதுவாக அங்கிருந்தவர்களை தேவிடியா பசங்களா என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் அடிப்பட்ட அ.சா.1, சங்கீதா, வத்துமலை ஆகியோர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். வத்துமலை மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார். அ.சா.1 வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு

சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-3**

Name : முனுசாமி
Father / Husband name : ராகவன்
Village : கீழ்மாவிலங்கை
Age : 46
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 05.01.2026

A1, A2 present. APP present.

**முதல் விசாரணை**

நான் தற்போது விவசாய வேலை செய்கிறேன். அ.சா.1 லட்சமணன், அ.சா.2 முருகன் ஆகியோர்களை எனக்கு தெரியும். சாட்சி பாண்டியராஜன் என்பவரை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 31.01.2022 அன்று இரவு 9 மணியிளவில் எங்கள் ஊரில் உள்ள ரேசன் கடை அருகே திருவிழாக்கூட்டம் நடந்தது. அப்போது கணக்கு வழக்கு பார்த்துக்கொண்டிருந்தபோது எதிரி கிருஷ்ணமூர்த்தி குடித்துவிட்டு வந்து கல்லிற்கு செலவு செய்துவிட்டு பொய்கணக்கு எழுதுகிறீர்கள் என்று பிரச்சனை செய்தார். அந்த கூட்டத்தில் இருந்தவர்கள் கேட்டபோது எதிரி கிருஷ்ணமூர்த்தியை கண்டுகொள்ளாமல் கணக்கை வாசிக்க சொன்னார்கள், அதனால் கோபம் அடைந்து எதிரி கிருஷ்ணமூர்த்தி கணக்கு நோட்டை தூக்கிவீசிவிட்டார். அசா.1 லட்சமணன் எதிரி கிருஷ்ணமூர்த்தி கணக்கு நோட்டை வீசினாய் என்று கேட்டபோது அ.சா.1 வலது கை விரலை கடித்துவிட்டார். பின்னர் 85 வயதுடைய வத்துமலை என்பவர் உட்கார்ந்துகொண்டிருந்தவரை தூக்கி கீழே போட்டு எதிரி கிருஷ்ணமூர்த்தி அவரின் உதட்டை கடித்துவிட்டார். பின்னர் அ.சா.1 ன் அக்கா சங்கீதா வந்து கேட்டபோது அவரையும் செங்கல்லால் தலையில் அடித்துவிட்டார்.பின்னர் 2வது எதிரி வந்து 1வது எதிரியிடம் ஏன் பிரச்சனை செய்கிறீர்கள் என்று எங்களை கேட்டார். பின்னர் அடிப்பட்ட அ.சா.1, சங்கீதா,

வத்துமலை ஆகியோர்கள் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். வத்துமலைக்கு தசை கிழிந்திருந்ததால் மேல்சிகிச்சைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பினார். அ.சா.1 வெள்ளிமேடுபேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.